செ.வெ.எண். 71 நாள் - 29.01.2024

## பத்திரிகைச் செய்தி

ஊரக வளர்ச்சி அலகு, நீலகிரி மாவட்டம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, உதகமண்டலம் அலுவலகத்தில் தூய்மை பாரத இயக்க திட்டத்தின்கீழ் செயல்பட்டுவரும் மாவட்ட திட்ட மேலாண்மை அலகு (**District Project Management Unit**) மற்றும் தகவல், கல்வி (ம) தொடர்பு குழு (**Information, Education and Communication Cell**) பிரிவுகளுக்கு கீழ்க்கண்ட பணியிடங்கள் வெளிநிரவல் (**Outsourcing**) முறை மூலம் தேர்ந்தெடுக்க தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

### மாவட்ட திட்ட மேலாண்மை அலகிற்கு (District Project Management Unit)

ஒரு திட்டமிடல், ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலர் (**Planning, Convergence and Monitoring)** பணியிடத்திற்கு, இந்தியாவில் உள்ள மத்திய அல்லது மாநில சட்டமன்றத்தின் சட்டத்தால் இணைக்கப்பட்ட அல்லது பாராளுமன்ற சட்டத்தால் நிறுவப்பட்ட அல்லது பிரிவு 3 இன் கீழ் பல்கலைக்கழகமாக அறிவிக்கப்பட்ட பிற கல்வி நிறுவனங்களில் ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்தில் இருந்து **B.Tech/MBA/MSC பட்டம்** பெற்றவர்கள் பல்கலைக்கழக மானியக் குழு சட்டம், 1956 அல்லது அதற்கு சமமான தகுதி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படும் பணியாளருக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, உதகை அலுவலகத்திலிருந்து ரூ.35,000/- வெளிநிரவல் முகமை மூலம் (சேவை கட்டணம் உட்பட) மாதாந்திர ஊதியம் வழங்கப்படும்.

### தகவல், கல்வி (ம) தொடர்பு (Information, Education and Communication Cell)

குழுவிற்கு, இரண்டு தகவல், கல்வி (ம) தொடர்பு ஆலோசகர் (**IEC Consultant**) பணியிடங்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் **Mass Communication/Mass Media** துறையில் முதுகலை பட்டம் அல்லது அதற்கு சமமான ஒரு புகழ்பெற்ற மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பட்டம் பெற்றிருக்க வேண்டும். மக்கள் தொடர்பு / தண்ணீர் மற்றும் சுகாதாரம் / சமூக அணி திரட்டல்/ பொதுத்துறை தொடர்பு ஆகியவற்றில் 2-3 வருட அனுபவம் விரும்பத்தக்கது. அரசு அல்லது தனியார் துறையில் சமூக ஊடக பிரிவுகளில் பணிபுரிந்த விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். அரசாங்க அதிகாரிகள், கல்வியாளர்கள், உள்ளூர் கலைஞர்கள்.

சமூக ஊடக செல்வாக்கு செலுத்துபவர்கள் மற்றும் பலதரப்பு கூட்டாளர்களுடன் தொடர்பு கொண்டு பணிபுரியும் திறன் பெற்றிருக்க வேண்டும். தொடர்புடைய தரவு மற்றும் ஆவணங்களைத் தேடுவதற்கு மைக்ரோசாப்ட் வேர்டு, பவர்பாயிண்ட், அடோப் போட்டோசஷாப் மற்றும் இல்லஸ்ரேட்டர் போன்ற பொதுவாகப் பயன்படுத்தப்படும் தொகுப்புகளுடன் பரிட்சயமான கணினித் திறன் பெற்றிருக்க வேண்டும்.

வீடியோ தயாரித்தல், மீம் தயாரித்தல், சுவரொட்டிகள் மற்றும் துண்டு பிரசுரங்களை உருவாக்குதல் போன்றவற்றில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் முன்மாதிரியான எழுத்துத் திறன், ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளும் திறன், விளக்கக்காட்சி திறன் (**Presentation skills**) மற்றும் தமிழிசை (**Tamil Pop)** கலாச்சாரம் பற்றிய நல்ல புரிதல் அவசியம். உயர்தரத்துடன் வெளியிடப்பட்ட படைப்பு அல்லது தொடர்புடைய துறையில் முன் அனுபவம் இருக்கும்பட்சத்தில், முறையான கல்வித் தகுதி, அனுபவம் மற்றும் வயதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தளர்த்தலாம். இப்பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்படும் பணியாளர்களுக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, உதகை அலுவலகத்திலிருந்து ரூ.25,000/- வெளிநிரவல் முகமை மூலம் (சேவை கட்டணம் உட்பட) மாதாந்திர ஊதியம் வழங்கப்படும்.

மேற்படி வெளிநிரவல் (**Outsourcing)** முறை மூலம் தற்காலிகமாக பணியமர்த்தப்படும் பணியிடங்களுக்கு தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் சான்றொப்பமிட்ட கல்வித் தகுதி மற்றும் முன் அனுபவ சான்றாவண நகல்களுடன் **06.02.2024 ஆம் தேதி மாலை 5 மணிக்குள்** அலுவலக நாட்களில் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கீழ்க்கண்ட முகவரிக்கு வந்துசேர வேண்டும். காலதாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**கூடுதல் ஆட்சியர் (வ) /திட்ட அலுவலர்,**
**மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,**
**உதகமண்டலம் - 643001**
**நீலகிரி மாவட்டம்.**

விண்ணப்பங்கள் வரப்பெற்றவுடன் நேர்காணல் குறித்த விவரங்கள் பின்னர் தெரிவிக்கப்படும்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.**
NilgirisPRO ProNilgiris NilgirisPRO